www.ecourtsindia.com

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I,**
**TIRUCHIRAPPALLI**
**C.C 212/2015**

Deposition of witness for வா.சா 1
Name : ராஜரெத்தினம்
Father Name :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act of 1969 of the day of 21.12.2021.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

ராமச்சந்திரன் என்பவர் தனிநபராக ஒரு ரிட் மனு தாக்கல்செய்திருந்தார் என்றால் சரியல்ல, அவர் சங்கத்தின் உறுப்பினர். அவர் சங்கத்தின் உறுப்பினர் என்பதற்கு எந்தவொரு ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். அவர் தாக்கல் செய்த ரிட் மனுவில் இவ்வழக்கின் எதிரிகள் யாரும் தரப்பினராக இல்லையென்றால் சரிதான். ராமச்சந்திரன் இந்த வழக்கில் தரப்பினர் இல்லையென்றால் அவர் இறந்துபோய்விட்டார். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.6 வில்லங்க சான்றிதழ் அசல் வழக்கு எண். 1128/1996 ல் 06.06.2011 ல் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட வில்லங்க சான்று என்றால் சரிதான். 02.07.2012 அன்று நானும் கந்தசாமி மற்றும் டி.எஸ்.எம். ரங்கராஜ் என்பவரும் தேனா வங்கி மற்றும் எதிரிகளுக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 1128/1996 ல் 06.06.2011 தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் மேற்படி அறிவிப்பு அனுப்பபப்ட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பில் என்னை சங்கத்தை விட்டு நீக்கியது மற்றும் சங்கத்தின் சொத்துக்களை மற்றொரு சங்கத்திற்கு மாற்றம் செய்தது தொடர்பாக நான் கோரிய பரிகாரங்களை நிராகரித்து தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. திருச்சி தஞ்சை திரைப்பட விநியோகஸ்தர் சங்கத்தின் பதிவெண் என்னவென்றால் 80/1969. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ–8 ஆவணத்தில் பதிவெண் S 80/1969 என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். சங்கத்தின் பதிவுசெய்யப்பட்ட முகவரி என்னவென்றால்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTP030016392015/truecopy/order-7.pdf

எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–11 ஆவணம் சங்க செயலாளர் பாஸ்கரன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட CRP.No.8200/2012 என்றால் சரிதான். அந்த மனுவிலும் பதிவெண் S 80/1969 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் சங்க முகவரி எண். 15/1, ஈ.வி.ஆர் தெரு, புத்தூர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கிலும் இவ்வழக்கின் எதிரிகள் யாரும் தரப்பினர்கள் இல்லையென்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–12 ல் குறிப்பிடப்பட்டுள்ள சங்க தேர்தல் எந்த தேதியில் நடந்தது என்றால் அந்த ஆவணத்தில் தேதி குறிப்பிடப்படவில்லை 2013 ஆம் ஆண்டு நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. 2013 ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலும் 06.06.2011 அன்று அசல் வழக்கு எண். 1128/1996 பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பிற்கு பின்னிட்டு நடைபெற்ற தேர்தல் என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணம் நான் இந்த வழக்கிற்காக தயாரித்த ஆவணம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–13 திருச்சி தஞ்சை மாவட்ட திரைப்பட விநியோகஸ்தர் சங்கம் 1993 ல் கலைக்கப்பட்ட பிறகு அதே நோக்கம் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட மற்றொரு சங்கத்தின் கூட்ட நடவடிக்கை என்றால் சரியல்ல, அது திருச்சி தஞ்சை புதுக்கோட்டை காயிதே மில்லத் மாவட்ட திரைப்பட விநியோகஸ்தர் சங்கத்தின் கூட்ட நடவடிக்கை. திருச்சி தஞ்சை மாவட்ட திரைப்பட விநியோகஸ்தர் சங்கம் 1993 ல் கலைக்கப்பட்ட பிறகு அதே முகவரியில் திருச்சி தஞ்சை புதுக்கோட்டை காயிதே மில்லத் மாவட்ட திரைப்பட விநியோகஸ்தர் சங்கம் நடந்துவருகிறது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–14 நாளிதழில் அறிவிப்பு காட்டுர் மகாலிங்கம் என்பவரால் கொடுக்கப்பட்டது என்றால் சங்க பொருளாளர் காட்டுர் மகாலிங்கத்தால் கொடுக்கப்பட்டது. அந்த அறிவிப்பானது அசல் வழக்கு எண். 1128/1996 ல் 06.06.2011 ல் தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த அறிவிப்பிலும் பதிவெண் S 80 /1969 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காட்டுர் மகாலிங்கம் என்பவர் அசல்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTP030016392015/truecopy/order-7.pdf

வழக்கு எண். 1128/1996 7 வது பிரதிவாதி என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–15 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள அவசர பொதுகுழு கூட்டம் அசல் வழக்கு எண். 1128/1996 ல் 06.06.2011 ல் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் கூட்டப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–16 ஆவணத்திலும் சங்க பதிவெண் S 80/1969 என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ல் சொல்லப்பட்டுள்ள செயற்குழு கூட்டம் அசல் வழக்கு எண். 1128/1996 ல் 06.06.2011 ல் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் கூட்டப்பட்டது என்றால் சரிதான். என்னை 1987 ஆம் ஆண்டிலேயே சங்கத்திலிருந்து நீக்கிவிட்டதால் நான் வா.சா.ஆ.17 ஆக தாக்கல் செய்த சங்க விதிமுறைகளுக்கும் எனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லையென்றால் சரியல்ல. நான் தாக்கல்செய்த வா.சா.ஆ.18 ஆவணமும் அதில் சொல்லப்பட்டுள்ள பேரவை கூட்டமும் அசல் வழக்கு எண். 1128/1996 ல் 06.06.2011 ல் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் கூட்டப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.19 ல் சொல்லப்பட்டுள்ள IA 983/1992 இடைக்கால உத்தரவானது சங்கம் கலைக்கப்படுவதற்கு முன்பாக வழங்கப்பட்ட உத்தரவு என்றாலும், அந்த உத்தரவு குறித்து அசல் வழக்கு எண். 1128/1996 ல் முழுமையான விசாரணை செய்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முழுமையான விசாரணை நடைபெறவில்லை, இடைக்கால மனுவானது மயிலாடுதுறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. நான் வா.சா.ஆ.20 ஆக தாக்கல் செய்துள்ள ஆவணமானது ஏற்கனவே எனது தரப்பில் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வா.சா.ஆ–1 ஆக தாக்கல் செய்யப்பட்டது நகல், வா.சா.ஆ.20 ஆக தாக்கல் செய்யப்பட்டது அதன் நீதிமன்ற சான்றிட்ட நகல். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.21 எதிருரை ஆவணத்தில் நான் திருச்சி தஞ்சை மாவட்ட திரைப்பட விநியோகஸ்தர் சங்கத்தின் செயலாளராக இருப்பதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் செயலாளராக இருப்பதாக குறிப்பிடவில்லை. வா.சா.ஆ.22 அறிவிப்பு கொடுக்கும்போது நான் திருச்சி

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTP030016392015/truecopy/order-7.pdf

தஞ்சை மாவட்ட திரைப்பட விநியோகஸ்தர் சங்கத்தின் உறுப்பினராக இல்லையென்றால் சரியல்ல. வா.சா.ஆ.23 முதல் வா.சா.ஆ–27 வரை தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் அசல் வழக்கு எண். 1128/1996 ல் எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை பொறுத்து ஏற்கனவே அசல் வழக்கு எண். 1128/1996 ல் விரிவான விசாரணை செய்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, விரிவான விசாரணை நடைபெறவில்லை.நான் பழிவாங்கும் எண்ணத்தில்தான் இந்த வழக்கை எதிரிகள் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னை 1987 ஆம் ஆண்டிலேயே சங்கத்திலிருந்து நீக்கிவிட்டார்கள் என்றாலும் அதை மறைத்து இன்றுவரை சங்கத்தின் செயலாளராக வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் சங்கத்தின் பணத்தை கையாடல் செய்ததற்கு எந்தவொரு ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. நான் கலைக்கப்பட்ட திருச்சி தஞ்சை மாவட்ட திரைப்பட விநியோகஸ்தர் சங்கம் இன்றுவரை செயல்பட்டு வருவதாக வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் சொல்லிவருகிறேன் என்றால் சரியல்ல. சங்கம் செயல்பட்டு வருவதாக நானே கூட்டம் நடந்ததாக ஆவணங்களை தயார் செய்து இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை விரோத எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கானது செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

//ஒப்பம்//சாட்சி

Taken down by me/before me in open court,
interpreted/Read over to the witness and admitted
by the deponent to be correct.

Sd/–K.Karthick Asath,
Judicial Magistrate No.I,
Tiruchirappalli.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTP030016392015/truecopy/order-7.pdf

www.ecourtsindia.com